2003 ஏப்ரல் 23] [பேரவைத் தலைவர்]

வேட்பு மனுத் தாக்கல் செய்ய கடைசி நாள்—

30-4-2003-பிற்பகல் 3-00 மணி;

வேட்பு மனுக்கள் பரிசீலனை—

5-5-2003-பிற்பகல் 3-00 மணி;

வேட்பு மனுக்கள் திரும்பப் பெறுதல்—

9-5-2003-பிற்பகல் 3-00 மணி;

தேர்தல் நாள், தேவையிருப்பின்—

12-5-2003-முற்பகல் 10-00 மணி முதல் பிற்பகல் 2-00 மணி வரை.

5. கவன ஈர்ப்பு

செயற்கை வைரத்திற்கு பட்டைதீட்டும் தொழில் நலிந்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். (குறுக்கீடு)

6. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன் அறிவிப்புகள்

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விதி 113-இன்கீழ் நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன், அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது, உட்காருங்கள். (குறுக்கீடு)

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு உரிமை மீறல் பிரச்சினை,—முதலமைச்சர் மீது ஒரு உரிமை மீறல் பிரச்சினை கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே, நீங்கள் காலையிலே அவையிலே கேட்டீர்கள். (குறுக்கீடு) காலையிலே, அவையிலே கேட்டீர்கள். அப்போதே சொல்லியிருக்கிறேன்; அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: ஏற்கெனவே நான் இன்னொன்றையும் கொடுத்திருக்கிறேன். மேலும், இப்போது என்மீது உரிமை மீறல் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனக்குப் பேச வாய்ப்புக் கொடுக்க வேண்டும். அதுமட்டுமல்ல; மைக் உங்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது என்று சொல்கிறீர்கள். நான் கேட்க விரும்புவது ஒரு கேள்விதான். பேரவைத் தலைவருடைய அனுமதி இல்லாமல், பேரவைத் தலைவருக்கே மைக் வராத காலம், இந்த அவையிலே நடந்திருக்கிறது. அந்தச் சம்பவம் உங்களுக்கு நினைவிருக்கும்; தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. இதில் விவாதமே கிடையாது. ஒரு தீர்ப்புக்குப் பிறகு, விவாதம் கிடையாது.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: நான் சொல்வதை கேளுங்கள். (குறுக்கீடு) No, நான் கொடுத்த தீர்மானம் என்ன ஆனது?

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என் ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு) நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: அது மாதிரி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானம் போன்றவை எல்லாம் என்னுடைய அறையில் வந்து பேச வேண்டிய பிரச்சினைகள். (குறுக்கீடு) ஒத்திவைப்புத் தீர்மானங்கள் பற்றி எல்லாம் என்னுடைய அறையிலே வந்து பேச வேண்டும். (குறுக்கீடு)

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: அறையில் பேசினேன்; நான் அறையில் கேட்டேன். எடுத்துக்கொள்ளலாம் என்றீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு எடுத்துக்கொள்வதாக இல்லை. (குறுக்கீடு) இன்றைக்கு எடுத்துக்கொள்வதாக நான் சொல்லவும் இல்லை. இப்படி அபாண்டமாகச் சொல்லியே உங்களுக்குப் பழக்கம் ஆகிவிட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS